# கிழக்குப் பல்கலைக்கழகம்

இரண்டாம் வருட பொதுக் கலைமாணித் தேர்வு – (வெளிவாரி) 2004/2005
(ஒக்டோபர்/நவம்பர்)- 2006

## ECO 202- பேரினப் பொருளியல்

நேரம் : 03 மணித்தியாலங்கள்

எவையேனும் ஐந்து வினாக்களுக்கு மட்டும் விடையளிக்குக.

01. அ. மொத்த தேசிய உற்பத்தியினையும், தேறிய தேசிய உற்பத்தியினையும், வேறுபடுத்தி விளக்குக.

(05 புள்ளிகள்)

ஆ. தேசிய வருமானத்தினைக் கணித்தலில் பெறுமதி சேர் முறையினையும், இறுதி உற்பத்திப் பொருள் முறையினையும் விபரிக்குக.

(05 புள்ளிகள்)

இ. திறந்த பொருளாதார அமைப்பொன்றில் இருந்து பின்வரும் தரவுகள் பெறப்பட்டுள்ளன இதனடிப்படையில் இப் பொருளாதார அமைப்பின் சமநிலைத் தேசிய வருமானத்தினைக் கணிக்குக.

$$Y = C + Io + Go + Xo - M$$
$$M = Mo + mYd$$
$$T = To + tY$$
$$C = Co + bYd$$
$$b = 0.9,\ t = 0.2,\ Co = 125$$
$$Xo = 150,\ Mo = 55,\ Io = 92$$
$$m = 0.15,\ To = 150,\ Go = 600$$

(10 புள்ளிகள்)

02. அ. நுகர்வுத் தொழிற்பாடு என்பதனால் யாது விளங்குகின்றீர் ? குறுங்காலத்தில் நுகர்வினைத் தீர்மானிக்கும் காரணிகளை விளக்குக.

(10 புள்ளிகள்)

ஆ. சராசரி நுகர்வு நாட்டத்தினையும், எல்லை நுகர்வு நாட்டத்தினையும் வேறுபடுத்தி விளக்குக.

(10 புள்ளிகள்)

அ. முதலீடு என்பதனால் யாது விளங்குகின்றீர் ?
ஒரு பொருளாதாரத்தில் முதலீட்டு மட்டத்தினை தீர்மானிக்கும் காரணிகளை ஆராய்க.

(10 புள்ளிகள்)

ஆ. அடையாளப் பணம் என்பதனால் கருதுவது என்ன ?

(05 புள்ளிகள்)

இ. பணத்தின் தொழிற்பாடுகளில் ஒன்றான "பரிமாற்று ஊடகம்" என்பதனை விளக்குக.

(05 புள்ளிகள்)

அ. பணத்தின் பெறுமதிக்கும், விலை மட்டத்திற்கும் இடையேயான தொடர்பினை விளக்குக.

(10 புள்ளிகள்)

ஆ. "நாணயக் கொள்கை" என்பதனால் கருதப்படுவது யாது என விளக்குக.

(10 புள்ளிகள்)

அ. IS – LM வளையி என்பதனால் யாது கருதுகின்றீர் ?
இவ்வளையிகளின் இயல்புகளை வரைபடங்களின் உதவியுடன் விளக்குக.

(10 புள்ளிகள்)

ஆ. IS – LM மாதிரியின் உதவியுடன் வட்டி விகிதத்திற்கும், வருமான மட்டத்திற்கும் இடையேயான இணைத் தொடர்புகளை விளக்குக.

(10 புள்ளிகள்)

அ. பணவீக்கம் என்றால் என்ன ?
பணவீக்கம் ஏற்படுத்தும் பொருளாதார விளைவுகளை 2000 ஆண்டுக்குப் பிற்பட்ட இலங்கை அனுபவங்களை ஆதாரமாகக்கொண்டு விளக்குக.

(10 புள்ளிகள்)

ஆ. கேள்வித் தூண்டல் பணவீக்கம், செலவுத் தூண்டல் பணவீக்கம் என்பனவற்றிக்கிடையேயான வேறுபாட்டினை அவை ஏற்படுத்தும் பொருளாதார விளைவுகளின் அடிப்படையில் விளக்குக.

இவ் வகைப் பணவீக்கங்களை கட்டுப்படுத்த முடியும் என விளக்குக.

(10 புள்ளிகள்)

அ. வர்த்தக சகட ஓட்டம் என்றால் என்ன என்பதனை விளக்குக.

(05 புள்ளிகள்)

ஆ. வர்த்தக சகட ஓட்டத்தின் படி முறைகளைக் கவனத்தில் கொண்டு அதனைக் கட்டுப்படுத்தும் பல்வேறு வழி முறைகளை விளக்குக.

(10 புள்ளிகள்)

இ. 'சென்மதி நிலுவை எப்பொழுதும் சமப்படுத்தப்பட்டுக் காணப்படும்' விளக்குக.

(05 புள்ளிகள்)

பின்வருவனவற்றினைச் சுருக்கமாக விபரிக்குக.

I. மிதக்கவிடும் நாணயமாற்று விகிதம்
II. பிலிப்வளை கோட்பாட்டில் வேலையினமையும் பணவீக்கமும்
III. சர்வதேச வர்த்தகத்தினை மேம்படுத்துவதற்கு இலங்கை அரசு பின்பற்றும் பிரதான வழி முறைகள்
IV. பொருளாதார வளர்ச்சி

(4 x 5 = 20 புள்ளிகள்)